**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 176/2019 |
| Name | : Ibrahim |
| P.W. | : 4 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.06.2025

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது உடுமலைப்பேட்டை காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிகிறேன். கடந்த 06.05.2016 ம் தேதி மடத்துக்குளம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்த போது மடத்துக்குளம் கிருஷ்ணாபுரத்தில் வசிக்கும் பாலசுப்பிரமணியம் என்பவர் நிலையம் வந்து கொடுத்த எழுத்து மூலமான புகாரைப் பெற்று மடத்துக்குளம் காவல் நிலைய குற்ற எண். 112/2016 இதச பிரிவுகள் 279, 337 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **புகார் மனு அ.சா.ஆ.3 ஆகவும் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. அசல் மற்றும் புகாரை இணைத்து உடுமலை நீதித்துறை நடுவர் எண். 2 க்கும் நகல் மற்றும் புகாரை மேல் விசாரணைக்கு காவல் உதவி ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன். இது சம்மந்தமாக காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) சம்பவம் 05.05.2016 ம் தேதி காலை 06.00 மணிக்கு நடந்தது. புகார் யாரால்

கொடுக்கப்பட்டது என்றால் காயம்பட்டவரின் மகன் கொடுத்தார். புகாரை அவர் ஏற்கனவே எழுதி வைத்து கொடுத்தார் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை 06.05.2016ம் தேதி காலை 08.30 மணிக்கு பதிவு செய்யப்பட்டது. ஒரு நாள் காலதாமத்திற்கு காரணம் என்ன என்றால் காயம்பட்டவரிடம் வாக்குமூலம் பெற இயலவில்லை அவரது மகன் மருத்துவமனையில் சேர்த்துவிட்டு வந்து புகார் தந்ததால் தாமதம் ஏற்பட்டது. உடுமலை அரசு மருத்துவமனையில் இருந்து இண்டிமேசன் பெறப்பட்டது. எத்தனை மணிக்கு பெறப்பட்டது என்று சரியாக ஞாபகம் இல்லை. இண்டிமேசன் பெற்று அரை மணி நேரத்தில் உடுமலை அரசு மருத்துவமனைக்கு சென்றேன்.

(2) புகாரில் எழுதப்பட்ட பகுதிக்கும் புகார்தாரரின் கையெழுத்திற்கும் வித்தியாசம் உள்ளது என்றால் சரியல்ல. புகார்தாரர் கொடுத்த பெய்யான புகாரை பெற்று சரியாக விசாரணை செய்யாமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/–Thiru.M.Dheenadhayalan, B.A., B.L.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்